# துறையூர் நகராட்சி

2018 ஆம் வருடம் மே மாதம் 11 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திரு.கா. பாலகிருஷ்ணன்,
தனி அலுவலர்

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 11.5.2019 | 01 | துறையூர் நகராட்சியில் 2018–19ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி (TURIP 2018–19) திட்டத்தின் கீழ் பழுதடைந்த தார் சாலைகளை புதுப்பிக்கவும் மற்றும் புதிதாக தார்சாலைகள் அமைக்கவும் கீழ்கண்ட பணிகளுக்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து மான்யம் பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. (ந.க.எண்.2074/2018/இ1) | தீர்மான எண்.388 அனுமதிக்கப்ப டுகிறது. |

| வ.எண் | வார்டு எண் | சாலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 7 | நடராஜன் காலனி | 9.50 |
| 2 | 9 | சாமிநாதன் நகர் குறுக்கு தெரு | 14.25 |
| 3 | 9 | சாமிநாதன் நகர் (கமலா அவென்யூ) | 8.00 |
| 4 | 18 | சொரத்தூர் ரோடு குறுக்கு தெரு | 10.25 |
| 5 | 19 | மலையப்பன் சாலை – மேற்கு குறுக்கு தெரு | 8.60 |
| 6 | 19 | மலையப்பன் சாலை (11வது குறுக்கு தெரு) | 11.90 |
| 7 | 24 | எக்ஸ்டென்சன் – அருணா அவென்யூ | 37.50 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>100.00</td></tr>
</table>
அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>11.5.2019</td>
<td>02</td>
<td>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் படி துறையூர் நகராட்சியில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் போக மீதமுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மதிப்பீடு தயார் செய்து கருத்துரு அனுப்ப கேட்டதின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியை தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம் (TUFIDCO) மூலம் வட்டி இல்லா கடனாக பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பி வைக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2075/2018/இ1)
<table>
<tr><td>நகராட்சியின் மொத்த வரிவிதிப்புகள்</td><td>:</td><td>14301</td></tr>
<tr><td>நகராட்சியின் மொத்த வீடுகள்</td><td>:</td><td>12026</td></tr>
<tr><td>வழங்கப்பட வேண்டிய மொத்த இணைப்புகள்</td><td>:</td><td>10349</td></tr>
<tr><td>ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள்</td><td>:</td><td>5767</td></tr>
<tr><td>தற்போது வழங்க வேண்டிய குடிநீர் இணைப்புகள்</td><td>:</td><td>4582</td></tr>
<tr><td>மதிப்பீட்டுத்தொகை</td><td>:</td><td>ரூ.160.00 இலட்சம்</td></tr>
</table>
அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்.389 அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>11.5.2019</td>
<td>03</td>
<td>அரசு ஆணை எண்.105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (MA2) வழங்கு துறை நாள்.21.07.2015ன் உத்தரவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 1) திறந்தவெளி கழிப்பிடத்தை ஒழித்தல் 2) மனித கழிவை மனிதனே அகற்றும் பணியினை தடை செய்தல் 3) திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்துதல் 4) பாதுகாப்பான சுகாதார நடவடிக்கைகளாக மாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் சுகாதார மற்ற கழிப்பிடங்களை மாற்றி</td>
<td>தீர்மான எண்.390 அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | சுகாதாரமான கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவும் உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேலும், அதன்படி இந்நகராட்சியில் சுகாதார கழிப்பிடங்கள் 648 எண்ணிக்கையில் கட்ட இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 648 தனி நபர் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் மறு கணக்கெடுப்பு பணி (Re-Survey) மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கூட்டமர்வில் அறிவுரை வழங்கப்பட்டதை தொடர்ந்து Re-Survey மறு கணக்கெடுப்பு பணி (Re-Survey) மேற்கொள்ளப்பட்டதில் தனி நபர் கழிப்பிடங்கள் கட்ட விண்ணப்பங்கள் வரப்பெற்று மேற்கண்ட விண்ணப்பங்கள் தூய்மை இந்தியா திட்டத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு மேற்கண்ட கழிப்பிடங்களுக்கு அரசு ஆணை எண்.105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (MA2) வழங்கு துறை நாள்.21.07.2015ல் கீழ்க்கண்டவாறு மத்திய அரசு பங்குகள், மாநில அரசு பங்குகள், உள்ளாட்சி நிறுவன பங்குத் தொகைகள் மற்றும் பயனாளிகள் பங்குத் தொகைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>TABLE_BELOW<br><br>மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில் உள்ளாட்சி நிறுவன பங்குத் தொகையான ரூ.2000/– நகராட்சி பங்குத் தொகையாக வழங்கவும் இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத் தொகைகளுக்கு உரிய பிரேரணை அனுப்பி பங்குத் தொகை பெற்றிட மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.5072/2015/எச்1)<br><br>**அலுவலக குறிப்பு:**<br>அ) உள்ளாட்சி நிறுவன பங்குத் தொகையான ரூ.2000/–ஐ நகராட்சி பங்குத் தொகையாக வழங்கவும் இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத் தொகைகளுக்கு உரிய பிரேரணை அனுப்பி பெற்றிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) தூய்மை இந்தியா திட்டத்தை தடையின்றி செயல்படுத்த ஏதுவாக மத்திய மற்றும் மாநில பங்குத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாநில பங்குத் தொகை பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |

Table (within the above cell):

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | சுகாதார கழிப்பிடம் கட்ட மொத்த மதிப்பீடு | 12000 |
| 2 | மத்திய அரசு பங்கு (Government of India share) | 4000 |
| 3 | மாநில அரசு பங்கு (State Government share) | 2000 |
| 4 | உள்ளாட்சி நிறுவன பங்கு (Municipal share) | 2000 |
| 5 | பயனாளிகள் பங்கு (Beneficiary share) | 4000 |
| | மொத்தம் | 12000 |

| | | | |
|---|---|---|---|
| 11.5.2019 | 04 | உள்ளாட்சி துறையில் துறையூர் நகராட்சியில் தமிழக அரசின் ஓராண்டு சாதனைக்கான பணிகள் குறித்த விவரத்தினை தினமலர் திருச்சி நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கான தொகை ரூ.31500/—யை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1003/2018/இ1)<br>**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலா | **தீர்மான எண்.391 அனுமதிக்கப்ப டுகிறது.** |
| 11.5.2019 | 05 | துறையூர் நகராட்சி வார்டு எண்.18 சொரத்தூர் சாலையில் சுமார் 45 வருடங்களுக்கு மேலாக குப்பைகள் பழைய உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியில் சேகரமாகும் குப்பைகள் 3கி.மீ தொலைவில் அமைந்துள்ள வெங்கடேசபுரம் புதிய உரக்கிடங்கில் சேமிக்கப்படுகின்றன. இந்நிலையில் பழைய உரக்கிடங்கு சொரத்தூர் சாலையில் உள்ள குப்பைகளை நவீன தொழில்நுட்ப முறையில் அகற்றி நிலத்தை மேம்படுத்தும் பொருட்டு, அப்பகுதியில் உள்ள மொத்த குப்பைகளின் அளவினை சர்வே (30900 மீ$^3$ கணக்கீடு) செய்யப்பட்டு, அதனடிப்படையில் மேற்காணும் பழைய உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio-Mining முறையில் அப்புறப்படுத்த ரூ.225.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து மான்யம் பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. (ந.க.எண்.3644/2015/இ1)<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலா | **தீர்மான எண்.392 அனுமதிக்கப்ப டுகிறது.** |
| 11.5.2019 | 06 | இந்நகராட்சியில் வார்டு எண்.23 ஸ்ரீராம் நகரில் சமுதாய உரக்கிடங்கு அமைப்பதை எதிர்த்து திரு.கார்த்திகேயன் என்பவரால் துறையூர் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.22/2018—ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு. R.ராஜசேகரன் BABL அவர்கள் ஆஜராகவும், எதிர் மனுதாரர் மற்றும் எதிர் வழக்குறை தாக்கல் செய்ய வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/— (ஏழாயிரத்து நூறு) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1260/2018/இ1)<br>**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.393 அனுமதிக்கப்ப டுகிறது.** |
| 11.5.2019 | 07 | இந்நகராட்சி வார்டு எண்.9 சாமிநாதன் நகரில் சமுதாய உரக்கிடங்கு அமைப்பதை எதிர்த்து திரு.பாலகிருஷ்ணன் என்பவரால் துறையூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.18/2018ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு. R.ராஜசேகரன் BABL அவர்கள் ஆஜராகவும், எதிர் மனுதாரர் மற்றும் எதிர் வழக்குறை தாக்கல் செய்ய வழக்கறிஞர் கட்டணமாக ரூ.7500/— (ஏழாயிரத்து நூறு) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.995/2018/இ1)<br>**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.394 அனுமதிக்கப்ப டுகிறது.** |
| 11.5.2019 | 08 | இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) 2016—17ன் கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியினை 29.12.2017ம் தேதிய தினமலர் திருச்சி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.10836/—யை Bright Advertising, Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3644/2015/இ1)<br>**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.395 அனுமதிக்கப்ப டுகிறது.** |

11.5.2019

**09**

துறையூர் நகராட்சியில் தொழில்வரி 01.10.2008 முதல் திருத்தம் செய்யப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. அரசாணை எண்.12.01.99ன் படி ஐந்து ஆண்டுகளுக்க ஒரு முறை தொழில் வரியை 25 சதவீதம் முதல் 35 சதவீதத்திற்குள் உயர்வு செய்துகொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆ1, 24.05.2018ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையின் படி துறையூர் நகராட்சி எல்லைக்குள் 01.10.2018 (இரண்டாம் அரையாண்டு முதல்) தொழில்வரி சீராய்வு (கட்டாயமாக) நடைமுறைப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள படி வங்கிகள் மற்றும் வங்கிகளில் பணிபுரியும் அலுவலர்கள், மத்திய மாநில அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் பணியாளர்கள், தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் தனியார் மருத்துவமனை, மருத்துவமனை, மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள், அரசு போக்குவரத்து அலுவலர்கள் பணியாளர்கள், மின்வாரிய அலவலர்கள், பணியாளர்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்கு வரும் 01.10.2018 முதல் கீழ்கண்டவாறு தொழில்வாரி உயர்வு செய்யலாம். மேலும் ஏற்கனவே உள்ள வரி விதிப்புகளுக்கும் மன்றம் நிர்ணயம் செய்யும் சதவீதம் பொருந்தும்.

| வ.எண் | சராசரி அரையாண்டு வருமானம் | 01.10.2018 முதல் அமுலில் உள்ள தொழில்வரி (ரூபாய்) | 01.10.2018 முதல் 30% உத்தேச உயர்வு தொகை (ரூபாய்) | 01.10.2018க்கு பின் நிர்ணயம் செய்யப்படும் அரையாண்டு தொழில்வரி (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 21,000 வரை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | 21,001 முதல் 30,000 | 129 | 39 | 168 |
| 3 | 30,001 முதல் 45,000 | 138 | 41 | 179 |
| 4 | 45,001 முதல் 60,000 | 634 | 190 | 824 |
| 5 | 60,001 முதல் 75,000 | 950 | 285 | 1235 |
| 6 | 75,001 முதல் above | 1250 | – | 1250 |

அரசு உத்தரவில் தொழில்வரி சீராய்வு செய்யும் போது குறைந்தபட்சம் 25 சதவீதம் முதல் அதிகபட்சமாக 35 சதவீதம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும் ஐந்தாண்டுக்கு ஒருமுறை தொழில்வரி உயர்த்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளபடியால் துறையூர் நகராட்சியில் அக்டோபார் 1, 2018 முதல் (2018–19 இரண்டாம் அரையாண்டு முதல்) தொழில் வரியை உயர்த்தி நிர்ணயம் செய்வது குறித்து மன்றத்திற்கு மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2274/2018/அ1)

**அலுவலக குறிப்பு :**

அ) அரசாணை எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.01.1999 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆ1, 24.05.2018ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையின் படி துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொழில்வரி 30 விழுக்காடு உயர்வு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்396 அனுமதிக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| | | ஆ) மன்றத் தீர்மானத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ள தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.25,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/–.கா. பாலகிருணணன்,

தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர், (பொ)

துறையூர் நகராட்சி.

# துறையூர் நகராட்சி

2018 ஆம் வருடம் மே மாதம் 31 ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திரு.கா. பாலகிருஷ்ணன்,
தனி அலுவலர்

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடை பெற்ற நாள்</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>31.5.2018</td><td>01</td><td>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் துறையூர் நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீருக்கு 1000 லிட்டருக்கு ரூ.4.50 வீதம் குடிநீர் கட்டணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் கட்டணம் உயர்த்தப்பட்டு அரசாணை (அரசாணை எண்.G.O.Ms.No.39 நாள்.17.04.2018 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) படி நகர் பகுதிகளுக்கும், ஊரக பகுதிகளுக்கும் கீழ்கண்ட விவரப்படி குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்து, நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் கடித எண்.F3/810/Tariff Revision/AEII/O&M/2017 நாள்.24.04.2018–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>1. Water Tariff to be implemented for the period from 01.12.2017 to 31.03.2018<br>Urban Local Bodies : Rs.9.00 / 1000 Litres.<br>Rural Local Bodies : Rs.7.00 / 1000 Litres.<br>2. Water Tariff to be implemented for the period from 01.04.2018 to 31.03.2019 (5% annual increase)<br>Urban Local Bodies : Rs.9.45 / 1000 Litres.<br>Rural Local Bodies : Rs.7.35 / 1000 Litres.<br>3. Water Tariff to be implemented for the period from 01.04.2019 to 31.03.2020 (5% annual increase)<br>Urban Local Bodies : Rs.9.92 / 1000 Litres.<br>Rural Local Bodies : Rs.7.72 / 1000 Litres.<br>4. Water Tariff to be implemented for the period from 01.04.2020 to 31.03.2021 (5% annual increase)<br>Urban Local Bodies : Rs.10.42 / 1000 Litres.<br>Rural Local Bodies : Rs.8.11 / 1000 Litres.<br>5. Water Tariff to be implemented for the period from 01.04.2021 to 31.03.2022 (5% annual increase)<br>Urban Local Bodies : Rs.10.94 / 1000 Litres.</td><td>தீர்மான எண்.397 அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>Rural Local Bodies : Rs.8.51 / 1000 Litres.<br>மேற்கண்ட அரசாணை மற்றும் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் பார்வையிட்டு பதியலாம். மேலும் மேற்கண்ட கட்டண விகிதங்களின் படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் கட்டணம் உயர்வு 01.12.2017 முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், நிலுவை கேட்பு தொகை வரப்பெற்றால் அதற்கான தொகையும் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.5.2018</td>
<td>02</td>
<td>துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு TN48H 4626 வாகனம் தகுதி சான்று பெற பழுது நீக்கம் செய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலையின் பெயர்</th><th>ஸ்ரீ குமரன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் 23, திருச்சி ரோடு, துறையூர்.</th><th>உப்பிலியாபுரம் வேளாண்மை பொறியியல் பணி மையம், உப்பிலியாபுரம்.</th></tr>
<tr><td>01</td><td>TN48H 4626 வாகனம் பழுது நீக்கம் செய்தல்</td><td>ரூ.57,700/– மதிப்பீட்டை விட ரூ.5200/– அதிகம் 9.90% (above)</td><td>ரூ.51,850/– மதிப்பீட்டை விட ரூ.650/– அதிகம் 1.24% (Less)</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த உப்பிலியாபுரம் வேளாண்மை பொறியியல் பணி மையம் உப்பிலியாபுரம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.<br>மேலும் பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசிய தேவையினை கருதி, சுகாதார பணிகள் தொய்வின்றி நடத்திட மேற்கண்ட வாகனம் அவசியம் தேவைப்படுவதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த உப்பிலியாபுரம் வேளாண்மை பொறியியல் பணி மையம் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3280/2012/எச்1)</td>
<td>தீர்மான எண்.398 அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>31.5.2018</td>
<td>03</td>
<td>துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN45 x 7856 வாகனத்திற்கு தகுதி சான்று பெற வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கொண்டு சென்ற பொழுது வட்டார போக்குவரத்து அலுவலர் துறையூர் அவர்களால் மேற்கண்ட வாகனத்திற்கு, வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்த அறிவுரை வழங்கப்பட்டதை தொடர்ந்து TN45 x 7856 வாகனத்திற்கு வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்திய வகையில் செலவினம் ரூ.4500/– மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.399 அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 31.5.2018 | **04** | துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு TN45 x 7856 வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு கீழ்கண்ட இனங்களுக்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>01) தகுதி சான்று கட்டணம் – ரூ.800<br>02) சர்வீஸ் சார்ஸ் – ரூ. 50<br>03) புண் சான்று கட்டணம் – ரூ.100<br>04) பசுமை வரி – ரூ. 515<br>--------<br>ரூ.1465<br>---------<br>**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.400 அனுமதிக்கப்ப டுகிறது.** |
| 31.5.2018 | **05** | துறையூர் நகராட்சி பொது சுகாதார குப்பை லாரி TN45H4626 வாகனம் தகுதி சான்று பெற மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் ரூ.52500/– மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>பொது சுகாதார பணிக்கு இவ்வாகனம் அவசியம் தேவைப்படுவதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.401 அனுமதிக்கப்ப டுகிறது.** |
| 31.5.2018 | **06** | துறையூர் நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு களப்பணியாளர்கள் (Domestic Breeding Checker) 15 நபர்கள் பணியமர்த்தி கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.207 நாள்.31.07.2017ல் ரூ.3,38,000/–க்கு ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.<br>பின்னர் 1.9.2017 முதல் டெங்கு காய்ச்சல் அதிகரித்து 30.10.2017–ல் 32 எண்ணிக்கையாக உயர்ந்ததன் காரணமாக மேற்கண்ட டெங்கு ஒழிப்பு பணிக்கு களப்பணியாளர்கள் (Domestic Breeding Checker) 30 ஆக உயர்த்தி நகர்மன்ற தீர்மானம் 289 நாள்.30.11.2017ன் படி கூடுதலாக ரூ.5,20,950/– ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.<br>1) தீர்மானம் எண்.207 நாள்.31.07.2017ன் படி ஒப்புதல் – 3,38,000<br>2) தீர்மானம் எண்.289 நாள்.30.11.2017ன் படி ஒப்புதல் – 5,20,000<br>----------<br>மொத்தம் 8,58,000<br>31.01.2018 முடிய செலவு 7,74,180<br>---------- | **தீர்மான எண்.402 அனுமதிக்கப்ப டுகிறது.** |

<table>
<tr><td></td><td></td><td>மீதி இருப்பு 84,770<br>------------<br>மேலும் இப்பணி 2/18 (ம) 3/18 ஆகிய இருமாதங்கள் தனி 10 களப்பணியாளர்கள் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.<br>மேற்கண்ட இரண்டு மாதங்களுக்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>2/18 – 54740<br>3/18 – 53820<br>--------<br>108560<br>--------<br>இதில் 2/18 மாத ஊதிய களப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.<br>31.1.2018ம் தேதிய இருப்பு – 84770<br>2/18 மாத செலவு – 54740<br>--------<br>30030<br>--------<br>3/18 மாதம் வழங்கப்பட வேண்டும் 53820<br>கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.23790/– மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :<br>டெங்கு ஒழிப்பு பணிக்கு களப்பணியாளர்கள் பணி மிகவும் அத்தியாவசியம் ஆவதால் கூடுதல் செலவினம் ரூ.23,790/– மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2177/13/எச்1)</td><td></td></tr>
<tr><td>31.5.2018</td><td>07</td><td>துறையூர் நகராட்சியில் ஆத்தூர் சாலையில் உள்ள மயானத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதி 2015–16 & 2016–17 திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. பணியினை முழுமையாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர கூடுதல் பணிகளான தளம் அமைத்தல், மின்சார வசதி ஏற்படுத்துதல், வெண்டிலேட்டர் , Grill மற்றும் Window அமைத்தல் , பைப்லைன் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்காணும் பணிக்கு ரூ.6.00 இலட்சத்திற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.329 நாள்.02.02.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு 08.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு.<br><table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr><tr><td>1</td><td>திரு. R. கார்த்திகேயன், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.05% குறைவு</td></tr></table></td><td>தீர்மான எண்.403 அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.07% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.R.கார்த்திகேயன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.051/2018/இ1)
அலுவலக குறிப்பு.. திரு.R.கார்த்திகேயன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.5.2018</td>
<td>08</td>
<td>
வார்டு எண்.23 கூட்டுறவு நகரில் பூங்காவில் இயற்கை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி இடத்தில் உரம் தயாரிக்கும் கூடாரம் அமைப்பதற்கு ரூ.1.50 இலட்சத்திற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.373 நாள்.28.03.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு 08.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.06% குறைவு</td></tr>
<tr><td>1</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.04% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.06% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3641/2018/இ1)
அலுவலக குறிப்பு.. திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.06% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்.404 அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>31.5.2018</td>
<td>09</td>
<td>
துறையூர் நகராட்சி, 24 வார்டுகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சியாக செயல்படுத்துவதன் பொருட்டு, பெரிய கடைவீதி பகுதியில் பொது கழிப்பிடம் இல்லாததால், அப்பகுதியிலுள்ள மக்கள் பயன்பெறுவதற்கு பொது கழிவறை கட்டும் பணி மேற்கொள்ள ரூ.1.50 இலட்சத்திற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.372 நாள்.28.03.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு 08.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி
</td>
<td>தீர்மான எண்.405 அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>பெறப்பட்டது.  அதன் விபரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.05% குறைவு</td></tr>
<tr><td>1</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.08% அதிகம்</td></tr>
</table>
<br>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.257/2017/இ1)<br>
அலுவலக குறிப்பு.. திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.5.2018</td><td>10</td><td>வார்டு எண்.14 மாதவன் சந்து மற்றும் வார்டு எண்.19 அம்மாபட்டி சாலை ஆகிய பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்கள் பழுதடைந்துள்ளதால் காவிரி குடிநீர் சரியான நிலையில் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது.  இதனை தவிர்க்க குடிநீர் சீராக விநியோகம் செய்ய பழுதடைந்த பகிர்மான குழாய்கள் மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.1.60 இலட்சத்திற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.371 நாள்.28.03.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.  அதனை தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு 08.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.  அதன் விபரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.04% குறைவு</td></tr>
<tr><td>1</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.08% அதிகம்</td></tr>
</table>
<br>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.04% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.9611/2017/இ1)<br>
அலுவலக குறிப்பு.. திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.04% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.406 அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

31.5.2018 | 11

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.38162/2014–6/நாள்.22.01.2015ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகள் அகற்றுதல், தெருக்களை சுத்தம் செய்தல், சாக்கடை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம், காய்கறி மார்கெட் கழிவுகளை அகற்றுதல், டெங்கு, வைரஸ்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களில் இருந்து பொது மக்களை காக்கும் பணியாக துப்புரவு இருக்கின்ற காரணத்தினாலும் 28 துப்புரவு பணியாளர்களின் பணிகளை மட்டும் மனித ஆற்றல் நிரம்பிய நபர்களை கொண்டு உரிய ஏஜென்ஸி மூலம் பணி மேற்கொள்வதற்கும், மேற்கண்ட பணியினை உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு 3 ஆண்டுகளுக்கு இப்பணியை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன் படி Tender Transparency Act & Rules அடிப்படையில் பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சியில் துப்புரவு பணிக்கு மனித ஆற்றல் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி கீழ்கண்ட 3 ஆண்டுகள் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | பணி உத்தரவு காலம் | மொத்த காலம் |
|---|---|---|
| 01 | ந.க.எண்.5670–2011–எச்1–நாள்.18.06.2016 (01.07.2015 முதல் 30.06.2015) | 12 மாதங்கள் |
| 02 | ந.க.எண்.5670–2011–எச்1–நாள்.18.06.2016 (01.10.2016 முதல் 30.09.2017) | 12 மாதங்கள் |
| 03 | ந.க.எண்.5670–2011–எச்1–நாள்.18.06.2016 (01.10.2017 முதல் 30.09.2018) | 12 மாதங்கள் |

மேற்கண்ட 3 ஆண்டுகளுக்கான பணி உத்தரவு காலம் 30.09.2018வுடன் முடிவடைவதால், மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இத்தனை மனித ஆற்றல் நிரம்பிய பணியாளர்கள் அவசியம் தேவைப்படுவதாலும் தற்போது இந்நகராட்சியில் நிரந்தர பணியிடத்தில் கீழ்கண்ட அளவிலேயே பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள பணியிட எண்ணிக்கை | பணிபுரிந்து வருபவர்களின் எண்ணிக்கை | காலி பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு அலுவலர் | 1 | 1 | 0 |
| 2 | துப்புரவு ஆய்வர் | 1 | 1 | 0 |
| 3 | துப்புரவு மேற்பார்வையாளர் | 4 | 4 | 0 |
| 4 | துப்புரவு பணியாளர் | 89 | 53 | 36 |

மேற்படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில்; துப்புரவு பணியாளர்களின் காலிப் பணியிடம் மிகவும் கூடுதலாக காணப்படுகிறது. மேலும், கடந்த 5 ஆண்டுகளில் இந்நகராட்சியின் வருவாயில் நிர்வாக செலவினம் 49 சதவீதத்திற்கு கூடுதலாக இருந்து வந்த காரணத்தினால் பல்வேறு நிலையிலான காலி பணியிடங்கல் பூர்த்தி செய்ய இயலாத நிலை ஏற்பட்டு பணியாளர் பற்றாக்குறையாக இருந்து வருகிறது.

**தீர்மான எண்.407 அனுமதிக்கப்படுகிறது.**

ஆகவே கலம் எண். 5ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியாக காலிப்பணியிடங்கள் குறைந்த பட்சமாக 6 மாதத்திற்கு மனித ஆற்றல் நிரம்பிய நபர்களை கொண்டு உரிய ஏஜென்ஸி மூலம் தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன்படி Tender Tranparency Act & Rules ன்படி தகுதியான நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளலாம்.

**அட்டவணை.(2)**

**நிரந்தர அடிப்படையில் பணியாளர்களை பூர்த்தி செய்யும் பட்சத்தில் இம்மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம்.**

| **அடிப்படை சம்பளம்** | **அகவிலைப்படி** | **வீட்டு வாடகைப்படி** | **மருத்துவ படி** | **சுலவை படி** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| **15700** | **1099** | **450** | **300** | **200** | **17749** |

| வ.எண். | தேவைப்படும் நபர்கள் | பதவி | ஒரு மாத காலத்திற்கான ஊதியம் (அனைத்து படிகள் உள்பட) | 1 மாத காலத்திய்கான ஊதியம் (ரூபாயில்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | 36 | துப்புரவு பணியாளர்கள் | ரூ.17749/– | ரூ.6,38,964/– | – |

**அட்டவணை(3)**

**ஏஜென்ஸி மூலம் இப்பணியை மாவட்ட ஆட்சியர் விலை விகிதப்படி மேற்கொண்டால் எற்படும் செலவினம்.**

| வ.எண். | தேவைப்படும் நபர்கள் | பதவி | ஒரு மாத காலத்திற்கான ஊதியம் (அனைத்து படிகள் உள்பட) | 1 மாத காலத்திற்கான ஊதியம் (ரூபாயில்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | 36 | துப்புரவு பணியாளர்கள் | 413x30= ரூ.12390/– | ரூ.3,71,700/– | – |

**ஊதிய விகித ஓப்பீட்டு பட்டியல்**

| **வ.எண்.** | **பொருள்** | **நிரந்தர பணி அடிப்பயையில் இப்பணியை மேற்கொண்டால்** | **ஏஜென்ஸி மூலம் இப்பணியை மேற்கொண்டால் எற்படும் செலவினம்** | **சேமிப்பு** |
|---|---|---|---|---|

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>பணியாளர்களுக்கான செலவினம்</td><td></td><td></td></tr>
<tr><td>01</td><td>மனித உழைப்பூதியம்</td><td>ரூ.6,38,964/–</td><td>ரூ.3,71,700/–</td><td>2,67,264/–</td></tr>
</table>
எனவே, துப்புரவு பணியினை ஏஜென்ஸி மூலம் பணி மேற்கொள்ளப்படும் பொழுதும் ஏற்படும் செலவினத்தை நிரந்தர துப்புரவு பணியாளர்களின் செலவினத்துடன் ஒப்பீடு செய்யப்படடதில், ஏஜென்ஸி மூலம் இப்பணியை மேற்கொண்டால் ஏற்படும் செலவினம் குறைவாக உள்ளது.<br>
ஆகவே பொது சுகாதாரப் பணிகளுக்கு இத்தகைய மனித ஆற்றல் நிரம்பியாக பணியாளர்கள் அவசியம் தேவைப்படுவதால் இந்நகராட்சியின் பணியாளர் பற்றாக்குறையினை போக்கவும் திடக்கழிவு மேலாண்மை திட்டடத்தின் கீழ் குப்பைகள் அகற்றுதல், தெருக்களை சுத்தம் செய்தல், சாக்கடை சுத்தம் செய்தல், பேருந்துநிலையம், காய்கறி மார்கெட் கழிவுகளை அகற்றுதல், டெங்கு, வைரஸ்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களில் இருந்து பொது மக்களை காக்கும் பணியாக துப்புரவு இருக்கின்ற காரணத்தினாலும் 36துப்புரவு பணியாளர்களின் பணிகளை மட்டும் மனித ஆய்றல் நிரம்பிய நபர்களை கொண்டு தகுதிவாய்ந்த ஏஜெள்ஸி மூலம் பணி மேற்கொள்வதற்கும், இப்பணியை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன்படி Tender Tranparency Act & Rules அடிப்படையில் பணி மேற்கொள்ள 01.10.2018 முதல் 30.09.2021 முடிய மூன்றாண்டு ஆண்டுகளுக்கு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதிக்கு கருத்துரு அனுப்ப மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி, மனித ஆற்றல் நிரம்பிய நபர்களை கொண்டு தகுதிவாய்ந்த ஏஜென்ஸி மூலம் தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன்படி Tender Tranparency Act & Rules அடிப்படையில் பணி மேற்கொள்ளவும், இதனால் ஏற்படும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் ,நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.5.2018</td>
<td>12</td>
<td>மனுதாரர்கள் திரு.K.பழனியப்பன், S.வசந்தா க/பெ.K.சரவணன் (லேட்) மற்றும் திரு.J.முருகானந்தம் துறையூர் என்பவர்கள் துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, துறையூர் கிராமம் பழைய சர்வே எண்.101/2, 101/5, 101/6, 101/7 மற்றும் 101/8 (புதிய வார்டு A, பிளாக்–3, ந.அ.எண்கள்.15/2, 15/5, 15/6, 15/7, 15/8 மற்றும் 15/9)–ல் 3.19 ஏக்கர் நிலத்தினை ஒப்புதலளிக்கப்பட்ட துறையூர் முழுமைத்திட்டத்தில் விவசாய உபயோக (AGW2) பகுதியிலிருந்து கலப்பு குடியிருப்பு உபயோக பகுதியாக மாற்றம் செய்து தர கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள்.<br>
நகரமைப்பு ஆய்வாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. இடம் சமதளமாகவும், காலியிடமாகவும், உள்ளது. உத்தேச இடத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.உ.இ(திம).எண்.03/2018ல் செல்லும் 30 அடி அகல தார்சாலை அணுகுசாலையாக அமைகிறது. மேற்படி 30 அகல தார் சாலையானது துறையூர் நகராட்சி பராமரிப்பிலும் நிர்வாகத்திலும் உள்ளது. மேற்படி இடம் அங்கீகரிக்கப்பட்ட துறையூர் முழுமைத்திட்டத்தில் விவசாய உபயோக (AGW2) பகுதியிலும் மற்றும் விரிவு அபிவிருத்தி திட்டமில்லாத பகுதியிலும் அமைந்துள்ளது.<br>
எனவே, மேற்படி நிலப்பயன் மாற்ற உத்தேசத்தினை உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம், நகர்
</td>
<td>தீர்மான எண்.408 அனுமதிக்கப்ப டுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஊரமைப்புத்துறை அவர்கள் வழியாக அரசுக்கு சமர்ப்பிக்க பரிந்துரை செய்து அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1387/2018/எப்1)<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். | |

ஒம்/–.கா. பாலகிருணணன்,

தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர், (பொ)

துறையூர் நகராட்சி.